

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியும், முன்னாள் மத்திய அமைச்சருமான முரசொலி மாறன் அவர்களின் 93வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் மாவட்ட கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி பெரியார் நகரில் உள்ள முகாம் அலுவலகத்திலும், அதனைத் தொடர்ந்து மணல்மேட்டில் உள்ள மாவட்ட அலுவலகத்திலும் முரசொலி மாறன் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு, சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் எம்.கந்தசாமி கழக மாணவரணி செயலாளர் வீரமணி ஜெயக்குமார், மாவட்ட கழகத் துணைச் செயலாளர் ஆ.செந்தில்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.எஸ்.குமாரசாமி, மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், பகுதி செயலாளர்கள் வி.செல்வராஜ், வி.சி.நடராஜன், பொ.ராமசந்திரன், வில்லரசம்பட்டி முருகேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



முரசொலி மாறன் அவர்களின் 93 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் மோளையனூரில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. உடன் ஆசிரியர் ராமகிருஷ்ணன் உள்ளிட்ட கழகத்தினர் உள்ளனர்.

# நீலகிரியில் முரசொலி மாறன் 93வது பிறந்தநாள்!

நீலகிரி, ஆக. 19 –

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக திகழ்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலிமாறன் அவர்களின் 93வது பிறந்தநாளை முன்னிட்டு, நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்டக் கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில், மாவட்ட கழக பொறுப்பாளர் – குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம்.ராஜு அவர்களின் ஆலோசனைப்படி,



அலங்கரித்து வைக்கப்பட்ட முரசொலி மாறன் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார் தலைமையில், உதகை கிழக்கு நகர செயலாளர் ஜார்ஜ், உதகை மேற்கு நகர செயலாளர் ரமேஷ், உதகை வடக்கு மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் தொரை, மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் முஸ்தபா, பொதுக்குழு உறுப்பனர் வாணீஸ்வரி ஆகியோர் முன்னிலையில் நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட அணிகளின் அமைப்பாளர் காந்தல் ரவி, உதகை நகர அவை தலைவர் ஜெயகோபி, துணை செயலாளர்கள் இச்சுபாய், கிருஷ்ணன், மாவட்ட பிரதிநிதி கார்திக், மாவட்ட துணை அமைப்பாளர்கள் கீதா, விஜயகுமார், மார்க்கெட் ரவி, கோபால், ரகுபதி, வில்லியம், மஞ்சுகுமார், நகரமன்ற உறுப்பினர்கள் விஷ்னுபிரபு, சசிகுமார், மேரி பிளோரீனா, மீனா, பிரியா வினோதினி, கிளை கழக நிர்வாகிகள் ஸ்டான்லி, ரஞ்சித்,ஜமீல், ராஜன், சுரேஷ், விஷ்னு பைசல் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



காரைக்கால் தெற்கு தொகுதியில் தொடர் மின்வெட்டை கண்டித்து காரைக்கல் மாவட்ட திமுக சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தெற்கு தொகுதியில் உள்ள தலைமை மின்துறை அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில கழக அமைப்பாளரும் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான எ. எம். எச்.நாஜிம், தலைமை செயற்குழு உறுப்பினரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான நாக தியாகராஜன், வடக்கு தொகுதி ஒருங்கிணைப்பாளர் பிரபு என்கிற பிரித்திவிராஜ், அமுதா ஆறுமுகம், கழக நிர்வாகிகளும் மற்றும் கழக உறுப்பினர்களும் ஏராளமானோர் கலந்துகொண்டு கண்டன குரல் எழுப்பினர்.

மீண்டும் மீண்டுமா...

# பொய் பேசும் அமைச்சர் ஆதவ் அர்ஜூனா!

## ஆதாரங்களை வெளியிட்ட ஐயன் கார்த்திகேயன்!

சட்டமன்றத்தில் நேற்று பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, 2020-க்கு முன்பு தமிழ்நாட்டில் போதை கலாச்சாரம் இல்லை என்பதை நாங்கள் மீண்டும் உறுதியாகப் பதிவு செய்கிறோம். போதை கலாச்சாரம் அதிகமாக இருந்தால் குழந்தைகள் மீது பாலியல் வன்கொடுமைகள் நடக்கும்.

2020-இல் 4,038 போக்சோ (POCSO) வழக்குகள் பதிவாகின. 2021-இல் 6,064, 2022-இல் 6,580, 2023-இல் 6,968 மற்றும் 2024-இல் 10,046 போக்சோ வழக்குகள் பதிவாகியுள்ளன.

போதைப் பொருளுக்கு எதிராக எத்தனை கூட்டங்கள் கடந்த 5 ஆண்டுகளில் நடந்தன?

இந்த ஆதாரங்கள் எல்லாம் தி.மு.க. ஆட்சியில் காவல்துறையால் கொடுக்கப்பட்ட அறிக்கை; இது தமிழக வெற்றிக் கழகத்தின் அறிக்கை இல்லை என்றார்.

அமைச்சர் ஆதவ் அர்ஜுனா அ.தி.மு.க. ஆட்சியில் போதைப்பொருள் நடமாட்டம் இல்லை என்று சட்டமன்றத்தில் தெரிவித்துள்ள தகவல் பொய் என கடந்த தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு அரசின் "உண்மை சரிபார்ப்புக் குழு" திட்ட இயக்குநராக இருந்த ஐயன் கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

அவர் தனது எக்ஸ் பதிவில், "

**தமிழ்நாட்டில் 2020க்கு முன்பாக போதை கலாச்சாரமே இல்லை என்ற பொய்யை சட்ட சபையில் வைத்து அமைச்சர் ஆதவ் பேசுகிறார். அதாவது, 2020க்கு முன்பு போதைப்பொருளை யாருமே பயன்படுத்தல போல. ஆனா Data பொய் சொல்லாது, Narcotics Drugs & Psychotropic Substance Act for the year 2017 படி 2017ம் 3812 ஆக இருந்த வழக்குகள், 2020ம் ஆண்டே 5403 ஆக அதிகரித்து விட்டது என்று ஒன்றிய அரசு தரவுகளையே வழங்கி இருக்கு.**

https://mha.gov.in/MHA1/Par2017/pdfs/par2022-pdfs/RS-14122022/839.pdf

**2020ல் போதைப் பொருள் தொடர்பான வழக்குகளில் தமிழ்நாடு 3ம் இடத்தில் இருந்து இருக்கு.**

https://timesofindia.indiatimes.com/city/chennai/tamil-nadu-third-in-cases-registered-under-narcotics-act/articleshow/86414626.cms

**2019ல் தமிழ்நாட்டில் இருந்து 28750 கிலோ கஞ்சா தொடர்பான போதைப்பொருட்கள் கைபற்றப்பட்டன. அது 2020ல் 298678 கிலோவாக அதிகரித்து இருந்தது.**

https://sansad.in/getFile/annex/260/AU705.pdf?source=pqars

**2017ல் மதுரையில் கஞ்சா, மதுபானம் போன்ற வஸ்துகளை படித்த இளைஞர்களுக்கு தொடர்ந்து சப்ளை செய்து, போதை பழக்கத்துக்கு அடிமையாக்கி அவர்களை குற்றச் செயல்களில் ரவுடி கும்பல்கள் ஈடுபடுத்துவதாக செய்திகள் வந்த அப்போ பேப்பர் படிக்கலையா ?**

https://hindutamil.in/news/tamilnadu/215176-.html **பவுடர் நுணுக்குவது நுட்பமான ஆட்கள் கூட இருக்கும் போது கேட்டு தெரிஞ்சுக்கோங்க சார்" என தெரிவித்துள்ளார்.**



**ஐயன் கார்த்திகேயன்**
உண்மை சரிபார்ப்புக் குழு
முன்னாள் திட்ட இயக்குநர்



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் கோவிலூர் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். உடன் திருவரங்கம் மேற்கு ஒன்றியச் செயலாளர் கே.பி.கே.டி.தங்கமணி, பொதுக்குழு உறுப்பினர் ஆர்.வி.செல்வம் மற்றும் பலர் உள்ளனர்.

# மலேசியா தளபதி பேரவை சார்பில் கருத்தரங்கம்!

கோலாலம்பூர், ஆக.19–

என்றும் மக்கள் மனதில். திராவிட முன்னேற்ற கழகம் என்கின்ற தலைப்பில் மலேசியா தளபதி பேரவை சார்பில் நடத்தப்பட்ட காணொளி கருத்தரங்கு அயூப் அன்சாரி நீடூர் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் தலைமை கழக பேச்சாளர் சேலம் சுஜாதா, கடலூர் இளா புகழேந்தி, கோ.தாமரைச் செல்வன், காணொளி கருத்தரங்கில் சிறப்புரை யாற்றினார்கள்.

நிகழ்ச்சியில் ஜே.சிவானந்தம், ஹச்.எம்.ஜெய்னுதீன், சுந்தர், கார்த்தி, வேலாயுதம், லோகா, சர்புதீன், சூரிய பிரகாஷ், ஆல்பர்ட், சுந்தர பாண்டியன், வரகனேரி அசாருதீன், சவுதி, ஆசிப் அலி சேட், நல்ல முகமது, புரூணை, கலந்து கொண்டு சிறப்பித்தனர். முடிவில் பானுமதி நன்றி உரை யாற்றினார்.



திருச்செங்கோட்டில் உள்ள நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. கழக அலுவலகத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் பிறந்த நாள் அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி, முரசொலி மாறன் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் திருச்செங்கோடு நகர செயலாளர்கள் கார்த்திகேயன், நடேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம்.தங்கவேல், செல்வராஜ், தாமரைச் செல்வன், சாமிநாதன் பங்கேற்றனர். தளபதி சுப்பிரமணி, ராமசாமி, லலித் குமார், யுவராஜ், சுந்தரம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.பேரூர் கழகச் செயலாளர்கள் முருகன், ரமேஷ்பாபு, தீபன் மற்றும் கழகத் தோழர்கள் பங்கேற்று மரியாதை செலுத்தினர்.



நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை ஆண்டு திருவிழாவுக்கு வரும் பக்தர்கள் கடலில் இறங்கி குளிக்க த.வெ.க. அரசு அனுமதி மறுத்துள்ளதையடுத்து வேளாங்கண்ணியை சேர்ந்த பொதுமக்கள் உரிய பாதுகாப்பு மற்றும் வழி காட்டு நெறிமுறைகளுடன் கடலில் குளிக்க அனுமதி அளிக்க வேண்டும் என வலியுறுத்தி நாகை மாவட்ட ஆட்சித்தலைவரிடம் வேளாங்கண்ணி பேரூர் கழகச் செயலாளர் மரியசார்லஸ், கழக பேரூராட்சி மன்ற உறுப்பினர் மரியசூசை நிக்சன், பேரூர் கழக வர்த்தக அணி அமைப்பாளர் ஜெ.ஜெ.ராஜா மற்றும் வேளாங்கண்ணி பொதுமக்கள் கோரிக்கை மனு அளித்தனர்.

சேலம் மத்திய மாவட்டம்

# வழக்கறிஞர் அ.நவமணி மறைவு!

## கழகத்தினர் நேரில் அஞ்சலி!

*சேலம், ஆக. 19 -*

*சேலம் மத்திய மாவட்டத்தின் கழக வழக்கறிஞர் அ. நவமணி (வயது 64 ) வயது மூப்பின் காரணமாக இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*



*செய்தியறிந்து அன்னாரது உடலுக்கு மாவட்ட மாநகர பகுதி கழக நிர்வாகிகள். மாமன்ற உறுப்பினர்கள் வழக்கறிஞர்கள் மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.*

ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்

# ஜெ.திருவாசகம் தாயார் தேன்மொழி (எ)விஜயா மறைவு!

## கழகத்தினர் நேரில் அஞ்சலி!

ஈரோடு, ஆக. 19 –

ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் தாயாரும், ஈரோடு தெற்கு மாவட்ட கழக துணை செயலாளர் ஆ.செந்தில்குமார் அண்ணியுமான தேன்மொழி (எ)விஜயா 17.8.2026 திங்கட் கிழமை இரவு தெற்குபள்ளம் லட்சுமி கார்டனிலுள்ள அவரது இல்லத்தில் காலமானார் என்கிற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.




அன்னாருக்கு ஜெயக்குமார் என்ற கணவரும், திருவாசகம், கோவேந்தன் என்கிற இரண்டு மகன்களும் உள்ளனர்.

அன்னாரின் மறைவு செய்தியறிந்த மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், வார்டு கிளை கழக நிர்வாகிகள் இளைஞரணியினர், சார்பு அணிகளின் நிர்வாகிகள் அனைத்து கட்சி பிரமுகர்கள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## விருத்தாசலம் எம். செல்வராஜ்

**ஆகஸ்ட் 19 (1997)**



**தந்தை பெரியார் தலைமையில் 1944ஆம் ஆண்டு திராவிடர் கழகத்தில் சேர்ந்தார். பின்னர், அண்ணா தலைமையில் தி.மு.க. தொடங்கிய காலம் முதல் தொடர்ந்து தொய்வில்லாமல் கழகப் பணியாற்றியவர்.**

**தென்னாற்காடு மாவட்டத்தில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் ஒருவராக விளங்கியவர். மாவட்டக் கழகச் செயலாளர், கழக அமைப்புச் செயலாளர், மூன்று முறை தணிக்கைக்குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர். தமிழக சட்டப்பேரவைக்கு மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர். மாநில நிலவள வங்கி தலைவராக பணியாற்றியவர்.**

**மக்கள் பிரச்சினைக்காக கழகம் நடத்திய பெரும்பாலான போராட்டங்களில் பங்கேற்றவர். விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.**

**கழகச் சார்பில் 1996ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் 'பெரியார் விருது' வழங்கி சிறப்பித்தார்கள்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**